بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *16/01/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மீது கொண்டிருந்த அன்பு தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குறிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த ஒரு குத்பாவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக, அன்னாரது இறையன்பு பற்றிய அம்சத்தைக் குறிப்பிட்டிருந்தேன். அதைப் பற்றியே இன்று மேலும் சிலவற்றை விவரிப்பேன்.

இளமையிலும், நபித்துவ வாதத்திற்கு முன்பும்கூட, ரஸூல் (ஸல்) அவர்ளின் இறையன்பின் வேகம் எந்தளவு இருந்ததென்றால், ரஸூல் (ஸல்) அவர்கள் இதனால் நிம்மதியிழந்து, குகைக்குச் சென்று இறைவனுடன் தனிமையில் உரையாடுவதில் மூழ்கி விடுவார்கள். இந்த அன்பைப் பற்றி குறிப்பிடும் போதே ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"உண்மை என்னவென்றால், எப்போது அல்லாஹ்வுடன் அன்பும் ஆர்வமும் ஏற்பட்டு விடுகிறதோ, அப்போது உலகம் மற்றும் உலக மக்கள் மீது ஒரு வெறுப்பும், அருவருப்பும் ஏற்பட்டுவிடும். இயல்பாகவே தனிமையும் ஏகாந்தமும் விருப்பமானதாகிவிடும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலையும் இதுவாகவே இருந்தது. அல்லாஹ்வின் மீதான நேசத்தில் அன்னார் எந்த அளவு தம்மை மாய்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால், அன்னார் அந்த தனிமையிலேயே முழுமையான ரசனையையும் இன்பத்தையும் பெற்றார்கள். நிம்மதி மற்றும் வசதிக்கான எந்தச் சாதனமும் இல்லாத, செல்வதற்கே அஞ்சக்கூடிய இடத்தில், அன்னார் பற்பல இரவுகளைத் தனியாகக் கழித்தார்கள்.

இதிலிருந்து அன்னார் எவ்வளவு வீரமும் துணிச்சலும் மிக்கவராக இருந்தார்கள் என்பதும் தெரிகிறது. இறைவனுடன் தொடர்பு வலுவாக இருக்கும்போது, வீரமும் தானாகவே வந்துவிடும். எனவே நம்பிக்கையாளர் ஒருபோதும் கோழையாக இருக்க மாட்டார்; உலக மக்கள் தான் கோழைகளாக இருப்பார்கள், அவர்களிடம் உண்மையான வீரம் இருப்பதில்லை.

*ஹிரா குகையில் ரஸூல் (ஸல்) அவர்கள் புரிந்த இறைவணக்கம் பற்றி குறிப்பிடும் போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவித்த ஒரு ஹதீஸை ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மிக விரிவாக விளக்கினார்கள்.*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "அல்லாஹ் தனது அருளை முயற்சியின் மீதும் போராட்டத்தின் மீதும் அமைத்துள்ளான்." மேலும் இதில் ஸஹாபிகளின் (ரலியல்லாஹு அன்ஹும்) வழிமுறை நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியும் மேலான உதாரணமும் ஆகும். ஸஹாபிகளின் வாழ்க்கையைச் சிந்தித்துப் பாருங்கள்! அவர்கள் வெறும் சாதாரண தொழுகைகள் மூலமாகவா அந்தப் பதவிகளைப் பெற்றார்கள்? இல்லை! மாறாக அவர்கள் இறைவனின் திருப்தியைப் பெறத் தங்கள் உயிர்களைப் பற்றிக் கூட கவலைப்படவில்லை. ஆடு மாடுகளைப் போல இறைவழியில் தங்களை அர்ப்பணித்தார்கள். அதன் பிறகுதான் அவர்களுக்கு இந்த அந்தஸ்து கிடைத்தது.

அன்னார் கூறுகிறார்கள்: "பல மக்களை நாங்கள் பார்த்திருக்கிறோம், அவர்கள் ஒரு ஊதலில் தங்களுக்கு உயர்ந்த பதவிகள் கிடைக்க வேண்டும் என்றும், இறை அரியாசனம் வரை எட்ட வேண்டும் என்றும்தான் விரும்புகிறார்கள்... எம்முடைய ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை விடச் சிறந்தவர் யார் இருக்க முடியும்? அவர்கள் மனிதர்களிலேயே சிறந்தவர், தூதர்களிலும் நபிமார்களிலும் சிறந்தவர்; அவர்களே ஊதலின் மூலம் அத்தகைய காரியங்களைச் செய்யாத போது, வேறு யார் அவ்வாறு செய்ய முடியும்? பாருங்கள்! ஹிரா குகையில் ரஸூல் (ஸல்) அவர்கள் எப்படியெல்லாம் தியானம் செய்தார்கள்! எவ்வளவு காலம் இறைவனிடம் மன்றாடி அழுது பிரார்த்தித்தார்கள் என்பதை இறைவனே அறிவான்! ஆன்மத் தூய்மைக்காக தம்மை மாய்த்துக் கொண்டு எப்படியெல்லாம் கடினமாக உழைத்தார்கள்; அதன் பிறகுதான் இறைவனிடம் இருந்து அருட்கொடைகள் இறங்கின.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:*

அல்லாஹ்வின் மீதான நேசத்தில் ரஸூல் (ஸல்) அவர்களின் தொழுகைகளின் நிலை எப்படியிருந்தது என்றால், முதர்ரிஃப் என்பவர் தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்: "நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, அன்னார் தொழுது கொண்டிருந்தார்கள். அன்னாரது நெஞ்சிலிருந்து பானை கொதிப்பது போன்ற சத்தம் வந்து கொண்டிருந்தது." அன்னார் எந்த அளவு உருகி அழுது இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள் என்றால், பானையில் தண்ணீர் கொதிப்பது போலத் தோன்றியது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி, அன்னார் எந்த அளவு அதிகமாக இபாதத் செய்வார்கள் என்றால்; தொழுகையில் எந்த அளவு நின்று கொண்டிருப்பார்கள் என்றால், அன்னாரது பாதங்கள் வீங்கிவிடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் அன்பு மற்றும் இறைவணக்கத்தைப் பற்றி எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் கூறுகிறார்கள்:-

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்: 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணப்படுக்கையில் இருந்தபோது, கடுமையான பலவீனம் காரணமாக அன்னாரால் தொழுகை நடத்த முடியவில்லை. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தொழுகை நடத்துமாறு உத்தரவிட்டார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த உத்தரவிற்குப் பிறகு அன்னார் நோயின் தாக்கம் சற்று குறைந்ததை உணர்ந்தபோது, இரு மனிதர்களின் உதவியுடன் தொழுகைக்குச் சென்றார்கள்.'

'அப்போது அன்னாரது பாதங்கள் கடுமையான வலியின் காரணமாகத் தரையில் இழுபட்டுக் கொண்டு சென்ற அந்தத் காட்சி இப்போதும் என் கண்களுக்கு முன்னால் இருக்கிறது' என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். இந்த ஹதீஸிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால், அன்னாருக்கு எவ்வளவு கடுமையான நோய் இருந்தாலும், அன்னார் அல்லாஹ்வின் நினைவை மறக்கவில்லை. பொதுவாக மக்கள் ஒரு சிறிய கஷ்டம் வந்தாலே அனைத்து வணக்கங்களையும் மறந்து விடுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

நிச்சயமாக இது வெளிப்படையாகச் சாதாரணமான விஷயமாகத் தோன்றலாம்; ஆனால், ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் இருந்த அந்த நிலையைப் பாருங்கள், பிறகு அன்னாருக்கு இறைநினைவின் மீது இருந்த அந்த ஆர்வத்தைப் பாருங்கள், அதன் காரணமாகவே அன்னார் இரு மனிதர்களின் தோள்களில் கைகளை வைத்துக் கொண்டு தொழுகைக்கு வந்தார்கள். இது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல; மாறாக, அன்னாரது உள்ளத்தில் இருந்த அந்த இறைநினைவின் ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஒரு கண்ணாடி என்பது தெரிய வரும்.

இறைநினைவுதான் அன்னாரது உணவாக இருந்தது என்பதையும், அது இல்லாமல் அன்னார் வாழ்க்கையில் எந்த இன்பத்தையும் காணவில்லை என்பதையும் அறிவுடைய எவரும் புரிந்து கொள்ள முடியும். இதையே மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்: எனக்கு பிடித்தமான விஷயங்களில் ஒன்று, قُرَّةُ عَيْنِيْ فِي الصَّلٰوةِ அதாவது, எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையில் உள்ளது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:*

மக்களும் கேட்கிறார்கள். இன்றைய குழந்தைகளும் இளைஞர்களும்கூட, 'நன்மைகள் என்றால் என்ன, அல்லாஹ் நம்மிடம் திருப்தியாக இருக்கிறான் என்பதை எப்படி அறிவது?' என்று கேட்கிறார்கள். அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு மட்டுமே நன்மைகளைச் செய்யும்போதுதான் அல்லாஹ் திருப்தி அடைகிறான். மனிதன் தன்னைத் தானே சுயபரிசோதனை செய்து கொள்ள முடியும். இதற்கு வெளி ஆட்கள் எவரையும் நீதிபதியாக்கத் தேவையில்லை. தான் செய்யும் நன்மைகள் இறைவனுக்காகவே செய்யப்படுகின்றன என்றால், நிச்சயமாக அவை அல்லாஹ்விற்குப் பிடித்தமானவை என்பதை மனிதன் தானாகவே புரிந்து கொள்ள முடியும்.

ரஸூல் (ஸல்) அவர்களின் இபாதத் ஒரு தொடர்ச்சியான தன்மையைக் கொண்டிருந்தது. மேலும் அதீத ஆர்வம் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. பிறகு இறைவணக்கத்தில் அன்னார் ஈடுபட்டு விடுவார்கள். அந்த ரகசிய உரையாடல்கள் எவ்வளவு நீண்டதாக இருக்குமென்றால், மீண்டும் மீண்டும் இபாதத் செய்வதானால் அன்னாருடைய பாதங்கள் வீங்கிவிடும்.

ஸஹாபிகள், "யா ரஸூலல்லாஹ்! இந்த அளவு இறைவணக்கம் புரிய தங்களுக்கு என்ன அவசியம் நேரிட்டது? தங்களுடைய பாவங்கள்தான் மன்னிக்கப்பட்டு விட்டனவே?" என்று கேட்டபோது, "நான் ஒரு நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா?" என்பதே அன்னாரது பதிலாக இருந்தது.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* "அல்லாஹ்! அல்லாஹ்! என்ன ஒரு நேசம், என்ன ஒரு அன்பு! இறைநினைவில் நிற்கும் போது அவர்களுக்குத் தங்கள் உடல், உயிர் பற்றிய நினைவே இருப்பதில்லை." மக்களை நிம்மதி இழக்கச் செய்கின்ற, பார்ப்பவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அந்தத் துன்பங்கள் அன்னார் மீது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. எவ்வளவு உளத்தூய்மையான மற்றும் நன்றியுணர்வைக் காட்டும் பதில் இது! இது அன்னாரது புனித உள்ளத்தின் உணர்வுகளை எவ்வாறு தெளிவாக வெளிப்படுத்துகிறது!

பிறகு இதனைத் தொடர்ந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ரஸூல் (ஸல்) அவர்கள் எவ்வாறு தம்முடைய வேலைகளில் மூழ்கியிருப்பார்கள் என்றால், இறைவணக்கம் மட்டும் செய்துவிட்டு மற்ற வேலைகள் முடிந்துவிட்டன என்று இருக்கமாட்டார்கள். நாள் முழுவதும் அல்லாஹ்வின் பெயரைப் பரப்புவதிலும், அவனுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் கட்டுப்படுதலை நிலைநாட்ட முயற்சிப்பதிலும் ஈடுபட்டிருப்பார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* "எனவே நாம் அன்னாரது முன்மாதிரியைப் பின்பற்றி, தொழுகை மற்றும் வணக்கங்களில் இந்தத் தரத்தைப் பெற முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான முஸ்லிம்கள் என்று அழைக்கப்பட முடியும்."

*ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மீர் நாசிர் நவாப் சாஹிப் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டதை ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் விவரித்தார்கள்:* "நீங்கள் உங்கள் செயல்முறைக்காக கேட்டுள்ளீர்கள். அது யாதெனில், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை உண்மையாகப் பின்பற்றுதலின் பக்கம் ஆர்வம் காட்டுங்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது எல்லையற்ற நேசத்தை வெளிப்படுத்திய செயல்கள் இரண்டு: ஒன்று தொழுகை,

மற்றொன்று ஜிஹாத்." தொழுகையைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: قُرَّةُ عَيْنِيْ فِي الصَّلٰوةِ அதாவது, தொழுகையில் என் கண்களின் குளிர்ச்சி வைக்கப்பட்டுள்ளது."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "இந்தக் காலத்தில் ஜிஹாத் ஆன்மிக உருவத்தைப் பெற்றுள்ளது; இஸ்லாத்தின் தூதுச்செய்தியை உயர்த்துவதற்காக முயற்சிப்பதே இந்த வகை ஜிஹாத் ஆகும். அல்லாஹ் உலகில் வேறொரு வழிமுறையை வெளிப்படுத்தும் வரை இதுவே ஜிஹாத் ஆகும்."

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கவனமூட்டினார்கள்:* "நாம் இந்த ஜிஹாதில் பங்கேற்க விரும்பினால், அல்லாஹ்வின் மீதான நேசம் மற்றும் பிரார்த்தனைகளின் பக்கமும் நாம் கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய இபாதத்துகளின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி இதைச் செய்தால் மட்டுமே நமது செயல்களில் அருளும் உண்டாகும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை தந்தருள்வானாக.

*இறுதியாக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* "இன்று பங்களாதேஷ் ஜமாஅத்தின் ஆண்டு மாநாடும் நடைபெறுகிறது. அங்கு எதிர்ப்புகளும் அதிகமாக உள்ளன; அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைத்திருக்கட்டும் மற்றும் அவர்களின் மாநாடும் சிறப்பாக நிறைவடையட்டும்."

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ
سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ
وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ
يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)